Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 21, 2023

திங்கட்கிழமை ஒகஸ்ட் 21, 2023 | ஒளி: 09 கதிர் 66 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரிப்பு

வெங்காயத்துக்கு 40 சதவீத ஏற்றுமதி வரியை விதிப்பதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதன் காரணமாக இலங்கையில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக இலங்கை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில், ஒரு கிலோ



கிராம் வெங்காயத்தின் விலை 50 தொடக்கம் 70 ரூபாய் வரை அதிகரித்து,

தொடர்ச்சி P2

# தட்டுப்பாடு ஏற்படாது; அரிசி விலை கூடலாம்





வரட்சி காரணமாக ஒரு இலட்சம் ஏக்கர் நெற்செய்கைகள் அழிவடைந்துள்ள போதிலும் எதிர்காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என்று தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, தட்டுப்பாடு ஏற்படாவிட்டாலும் சந்தையில் அரிசியின் விலை ஓரளவுக்கு அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்ய ஆரம்பித்த போதும் விவசாயிகள் சபைக்கு நெல்லை விற்பனை செய்யாததால் அரசாங்கத்திடம் மேலதிக அரிசி அல்லது நெல் இருப்பு இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.தற்போது நெல் இருப்பு தனியார் வசம் இருப்பதாக குறிப்பிட்ட அவர், தனியார் வசம் உள்ள நெல் இருப்பு காரணமாக அரிசியின் விலை உயரும் பட்சத்தில் அதற்கு முகம் கொடுத்து நுகர்வோரை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். தொடர்ச்சி P2




பெண்கள் அதிகம் பங்களிக்கும்போதிலும் தொழிற்படையில் குறைவாகக் கணக்கிடப்படுகிறார்கள்: பாராளுமன்ற உறுப்பினர் ஹறினி அமரசூரிய

தொடர்ச்சி P3

## அதிகாலை விபத்தில் இருவர் மரணம்

■ பு.கஜிந்தன்

நெல்லியடி கொடிகாமம் வீதியில், கோயில் சந்தை பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (20) அதிகாலை 1:20 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மரண வீடு ஒன்றிற்கு சென்று விட்டு கொடிகாமம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்திற்கு உள்ளாகியதில் சம்பவ இடத்திலேயே இருவரும் மரணமடைந்துள்ளனர்.

இதில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக வசிக்கும் 31 வயதுடைய செல்வநாயகம் வின்சன் மனோஜ்குமார்,

கரவெட்டி வதிரியைச் சேர்ந்த 29 வயதுடைய விஜயகாந்த் நிசாந்தன் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலங்கள் பருத்தித்திறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.



## வரண்ட குளங்களுக்கு நீர் ...

யால தேசிய பூங்காவுக்கு சனிக்கிழமை (19) கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பூங்காவிலுள்ள வறண்ட குளங்களுக்கு நீர் வழங்கும் வேலைத்திட்டங்களை பார்வையிட்டார். அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும், யால தேசிய பூங்காவுக்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான பயணச்சீட்டுகளை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளுவதற்கான முறையொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து ஜனாதிபதி அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் இன்று

### செப். 16 வரை சுற்றுவிதிகளுக்கு பூட்டு

■ நிதர்ஷன் வினோத், பு.கஜிந்தன்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்றையதினம் (21) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு மிகவும் பக்தி பூர்வமாக ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர்



ஆலயக் கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

தொடர்ச்சி P2

### கச்சதீவைப் பெற்றதால்

## 80% கடல் விளை நிலங்களை இழக்க வேண்டி ஏற்பட்டது

### அழுத்தமாக தெரிவிக்க வேண்டும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

■ புகஜிந்தன்

1976 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் கச்சதீவு எமக்குரிய கடற்பரப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிலையில், நாம் 80 சதவீதமான கடல் விளை நிலங்களை இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஊர்வன இனங்கள் தீயில் கருகி இறந்தன

ஆனமடுவ, தல்கஸ்வெவ சுற்றுசூழலுக்கு சிலர் தீ வைத்த போது பல வகையான ஊர்வன இனங்கள் தீயில் கருகி இறந்துள்ளதுடன், அதேவேளை ஏரியில் இருந்த பல கும்பக் மரங்களின் வேர் அமைப்பும் தீயில் எரிந்து நாசமானதுடன் மரங்களும் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இறக்கின்றன.

ஆனமடுவ - நவக்கட்டகம வீதியில் அமைந்துள்ள



அழகிய சுற்றுச்சூழலாகக் கூறப்படும் இந்த தல்கஸ்வெவ, கொழும்பில் இருந்து ஆனமடுவ ஊடாக அனுராதபுரத்திற்கு பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாகும்.

தொடர்ச்சி P2

### இலங்கையின் சுற்றுலாத்துறையை

## முன்னணி வருமானம் ஈட்டும் துறையாக மாற்ற முடியும்

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய வேலைத்திட்டத்தின் பலனாக இந்நாட்டின் சுற்றுலா வியாபாரத்தில் வெற்றியை




ஈட்டிக்கொள்ளும் அதேநேரம் முன்னணி வருமானம் ஈட்டும் துறையாக சுற்றுலாத்துறையை மாற்றியமைக்க முடியும் என சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இலங்கையை வாட்டும் வரட்சி

## குடிநீர் பெறுவதில் 61 ஆயிரம் குடும்பங்களுக்கு சிக்கல்

15 மாவட்டங்களில் உள்ள 61 ஆயிரம் குடும்பங்கள் தற்போது பாதுகாப்பான குடிநீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் வரட்சியினால் 15 மாவட்டங்களில் 60 ஆயிரத்து 990 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரத்து 798 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று

தொடர்ச்சி P2

# ரத்வத்த தோட்டத்தில் வீடுகளை சேதமாக்கிய விவகாரத்துக்கு கடும் கண்டனம்

## பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை

■ எஸ்.சதீஸ்



மாத்தளை ரத்வத்த கீழ்பிரிவு தோட்டத்தில் தொழிலாளர்களுடைய குடியிருப்பை சேதப்படுத்தியமை குறித்து தோட்ட உதவி முகாமையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்

தொடர்ச்சி P2

## பாதுகாக்க திருப்பி அடிக்கலாம்

அரசாங்கமும், சட்டமும் எங்களுக்கு பாதுகாப்பு தராவிட்டால், எமது குடும்பத்தையும், சொத்தையும் பாதுகாக்க நாம் திருப்பி அடிக்க முடியும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்திய வித்தியாலயத்தில் நடைபெற்ற, மலையகம்-200 நூல் வெளியீட்டு விழாவில் மாத்தளை மாவட்ட ரத்வத்தை தோட்டத்தில் தமிழ் தொழிலாளர் சொத்துகள் சேதப்படு த்தியமை தொடர்பில் கருத்து கூறிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,



“அதுதான் உங்களுக்கு புரிகின்ற பாசை என்றால் அதை பேச நாம் தயார் என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறேன்.

தொடர்ச்சி P2

## அடாவடி செய்ய முடியாது

■ நிலமேகம் பிரசாந்த்

இனியும் எமது மக்களை அடிமைகளாக நினைத்து அடாவடி செய்வதை ஒருநாளும் மக்கள் பிரதிநிதியான எமக்கு பார்த்துக்கொ ண்டிருக்க முடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.ராதாகிருஸ்ணன்



தெரிவித்துள்ளார்.

மாத்தளை ரத்வத்தை கீழ்ப்பிரிவு தோட்டத்தில் தோட்ட துரை ஒருவரின் அடாவடிதனாமான விடயம் மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் குறித்த தோட்டத்துரையை பணி இடைநிறுத்தம் செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## குத்தகைக்கு வழங்கவில்லை



பெருந்தோட்ட காணிகள் மட்டுமே தோட்ட நிர்வாகக்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தோட்டத் தொழிலாளர்களை அல்ல என்றும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஊர்வன இனங்கள் தீயில் கருகி இறந்தன

வறட்சி காரணமாக தல்கஸ்வெவ பிரதேசத்தில் பல இடங்களில் சிறிய நீர்த்தேக்கங்கள் காணப்பட்டதுடன், ஊர்வன மற்றும் ஏனைய வனவிலங்குகளும் அவ்விடங்களில் இருந்து தாகம் தணிக்க வேண்டியிருந்தது.

இந்த தீ விபத்தால் ஏரியில் உள்ள சுமார் 20 ஏக்கர் நிலம் முற்றிலும் தீப்பிடித்து எரிந்ததாகவும், சுமார் 6 மணி நேரம் தீ பரவியதாகவும் கூறப்படுகிறது.

இருப்பினும், வேட்டைக்காரர்கள் மற்றும் மர கடத்தல்காரர்கள் இந்த சுற்றுச்சூழல் அமைப்புக்கு தீ வைத்து பின்னர் இறந்த கும்பக் மரங்களை ரகசியமாக வெட்டி வருகின்றனர், அதே நேரத்தில் வேட்டைக்காரர்கள் ஏரியின் சுற்றுச்சூழல் அமைப்பில் சுற்றித் திரியும் ஊர்வன மற்றும் பிற வன விலங்குகளை வேட்டையாடுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தட்டுப்பாடு ஏற்படாது; அரிசி விலை கூடலாம்



சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும் அறுவடை செய்யப்பட்ட பல வயல்களில் அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் விவசாய திணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## வெங்காயத்தின் விலை சடுதியாக அதிகரிப்பு

200 முதல் 220 ரூபாயக்கு விற்பனை செய்யப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜூலை மாதம் முதல் இந்தியாவில் வெங்காய விலை அதிகரித்துள்ளதன் காரணமாக, டிசெம்பர் 31ஆம் திகதி வரை மேற்குறிப்பிட்ட தீர்மானத்தை இந்திய அரசாங்கம் எடுத்துள்ளது.

இதன் காரணமாக இந்தியாவில் இருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்யும் நாடுகள் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கையில் பெரிய வெங்காயச் செய்கை தொடர்பாக உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாயத் திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வெங்காயச் செய்கை நீண்ட காலமாக வெற்றியடைந்து வந்தாலும் கடந்த சில வருடங்களாக அது தோல்வியடைந்துள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வெங்காயத்தின் வருடாந்தத் தேவை 3 இலட்சம் மெற்றிக் தொன்களாக இருந்த போதும் வருடாந்த வெங்காய இறக்குமதியானது 1 இலட்சத்து 31 ஆயிரத்து 795 மெற்றிக் தொன்களாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 80% கடல் விளை நிலங்களை இழக்க வேண்டி ஏற்பட்டது

வடபகுதியில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழக முதலமைச்சருக்கும் இந்திய பிரதமருக்கும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையயில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையை அழுத்தமாக தெரிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மீனவர்கள் மாநாட்டில் கச்சதீவை மீட்போம் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (18)தெரிவித்த கருத்துத் தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “இந்தியாவில் தேர்தல் வரப்போகிற நிலையில் அரசியல் நோக்கங்களுக்காக தேர்தல்கள் வரும்போது கச்ச தீவு தொடர்பில் கருத்துக்கள் எழுவது வழமையான செயல்பாடு.

1974 ஆம் ஆண்டு இருநாட்டு மீனவர்களும் இலங்கையிலும் இந்தியாவிலும் கடற் தொழிலில் ஈடுபடலாம் என ஒரு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த உடன்படிக்கை மூலம் இலங்கை கப்பல் கூட்டு தாபனத்தின் பெரிய ஆறு மீன்பிடி படகுகள் இந்தியா கடற்பரப்புகள் சென்று தொழிலில் ஈடுபட்டு வந்தன.

1974 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை 1976 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நிலையில் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்புக்குள்ளும் இந்தியா மீனவர்கள் இலங்கை கடற்பரப்பு கொள்ளும் நுழைய முடியாது என உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கை மூலம் கச்சதீவு கடற்பரப்பிலிருந்து இந்தியா வெளியேறிய நிலையில் இந்திய மீனவர்களின் மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கும் கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் பங்கு பெற்றுவதற்கும் தடை ஏற்படுத்தப்படுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய மீன்படியினால் வடக்கு கடற் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். ஆனால் இந்திய தரப்பில் கூறும் போது மீன்பிடிக்கச் சென்ற இந்திய மீனவர்களை சிங்கள இராணுவம் மற்றும் சிங்களக் கடற்படை கைது செய்வதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

நான் இவர்களுடைய பிரசாரத்தின் உண்மை நிலை தொடர்பில் பலமுறை இந்திய மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் தெரிவித்துள்ளேன்.

ஆனால் வடபகுதியில் உள்ள தமிழ் எம்.பிகள் தமிழக முதலமைச்சருக்கும் இந்திய பிரதமருக்கும் தமிழ்நாட்டில் இருந்து இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி தொழில் நடவடிக்கையயில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் இலங்கையில் கைது செய்யப்படுகிறார்கள் என்ற உண்மையை அழுத்தமாக தெரிவிக்க வேண்டும்.

## முன்னணி வருமானம் ஈட்டும் துறையாக மாற்ற முடியும்

சனிக்கிழமை (19) இடம்பெற்ற ஹில்டன் யால ரெசோட் திறப்பு விழாவில் உரையாற்றிய போது மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,



“சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத்தர ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதியின் இந்திய சுற்றுப் பயணத்தின் பலனாக இந்தியாவிலிருந்தே அதிக சுற்றுலாப் பயணிகள் வருகைத் தருகின்றனர். மூன்றாவது பெரிய எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் சீனாவிலிருந்து வருகை தருகின்றனர்.

அனைத்து விமான சேவை நிறுவனங்களும் இலங்கைக்கான விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளன. கட்டார் ஏயார்வேஸ் நிறுவனம் இலங்கைக்கு நாளாந்தம் ஆறு விமான சேவைகளை முன்னெடுக்கிறது.

துருக்கி விமான சேவையும் இலங்கைக்கு விமான பயணங்களை மேற்கொள்வதோடு, சிங்கப்பூர் விமான சேவை வாரத்தில் ஏழு நாட்களும் நாட்டுக்கு விமானப் சேவையை முன்னெடுக்கிறது.

இஸ்ரேல் அகீரே விமான சேவை ஒக்டோபர் 31 ஆம் திகதியிலிருந்து வாரத்துக்கு இரு முறை இலங்கைக்காள நேரடி விமான சேவயை முன்னெடுக்கவிருப்பதாக அறிவித்துள்ளது. மேலும் பல விமான சேவைகளை அதிகரித்த எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையிலிருந்து 80 விமான சேவைகள் வாராந்தம் இந்தியாவிற்கு மேற்கொள்ளப்படுகின்றன.

பல வருடங்களாக சுற்றுலாத்துறை குறித்து இலங்கையில் மேற்படி புதிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதி பல புதிய திட்டங்களை அறவித்துள்ளார். அதனூடாக தற்காலத்தில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைந்துகொள்ள முடியும்.

இந்த நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 31 சதவீதமானவர்கள் மீண்டும் மீண்டும் வருகை தருபவர்கள் என புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு இறுதி இலக்கான நாடாக அமைய வேண்டியதில்லை. ஆனால், உயர்ந்த நட்புறவும் விருந்தோம்பலும் கிடைக்கும் நாடாக இருக்க வேண்டும்.

இலங்கையில் தங்குவதற்கான விருப்பத்தினாலேயே முதலீட்டாளர்கள் பலரும் இங்கு முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளனர். எனவே இலங்கையில் கிடைக்கும் உயர் விருந்தோம்பலை தொடர்ச்சியாக வழங்க வேண்டும்” என்றார்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம் இன்று

அதன்படி கல்வியங்காட்டில் அமைந்துள்ள கொடிசீலை வழங்கும் செங்குந்தர் பரம்பரையை சேர்ந்தவரின் இல்லத்தில் கொடிச்சீலைக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று மங்கள வாத்தியம் சகிதம் கல்வியங்காடு வேல் மடம் முருகன் ஆலயத்துக்கு கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டது.

அதனை தொடந்து வேல் மடம் முருகன் ஆலயத்தில் விசேட பூஜைகள் இடம்பெற்று அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தில் பருத்தித்துறை வீதி ஊடக எடுத்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்து செல்லப்பட்டு நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

இன்று (21) காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பம் ஆகும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மகோற்சவ பெருவிழா தொடர்ந்து 25 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் ஞாயிற்றுக்கிழமை (20) காலை முதல் வீதித்தடைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## குடிநீர் பெறுவதில் 61 ஆயிரம் குடும்பங்களுக்கு சிக்கல்

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம், குருநாகல், இரத்தினபுரி, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வறட்சியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் வறட்சியால் 21 ஆயிரத்து 999 குடும்பங்களை சேர்ந்த 70 ஆயிரத்து 238 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சங்கானை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஆண்டு தோறும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிக மழை வீழ்ச்சி பதிவாகின்ற நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை போதிய மழை பெய்யாது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# ரத்வத்த தோட்டத்தில் வீடுகளை சேதமாக்கிய விவகாரத்துக்கு கடும் கண்டனம்

## பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை

பொலிஸ் மா அதிபரை ஞாயிற்றுக்கிழமை (20) தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு கலந்துரையாடிய போதே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சரின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரிவித்த அவர், மூன்று குடும்பங்களை சேர்ந்த 14 பேர் வாழ்ந்து வந்த வீட்டினை தோட்ட முகாமையாளருக்கோ அல்லது குறித்த தோட்ட உதவி முகாமையாளருக்கு உடைப்பதற்கு எவ்வித சட்டங்களும் இல்லை.

அவர்களை அகற்றுவதற்கு எந்த நீதிமன்றங்களிலும் அனுமதி பெறாமல் பலவந்தமாகவும் ஆராஜாக முறையில் செயல்பட்டு இருக்கிறார்கள். ஆகவே கல்வி இராஜாங்க அமைச்சர் என்ற ரீதியில் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் தோட்ட உதவி முகாமையாளரை உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளேன் .

தொழிலாளர்களின் குடியிருப்பை உடைத்து சேதப்படுத்திய உதவி முகாமையாளரை சட்டவிரோதமான முறையில் வீடுடைப்பு என்ற சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும். தோட்ட முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் அதிகாரத்தை துஸ்பிரயோகம் படுத்த முயற்சிக்கிறார்கள்.

அவர்கள் வீடமைத்து கொள்வதற்காக காணி ஒன்றினை ஒதுக்கீடு செய்து தருமாறு தோட்ட நிர்வாகத்திடம் கோரியுள்ளனர். முன்னால் இருந்த தோட்ட நிருவாகம் அதற்கான காணியினை வழ்ங்கியிருக்கிறது.

அந்த காணியில் சில பயிர்களை நாட்டியுள்ளதோடு தற்காலிக குடியிருப்பொன்றை அமைத்துள்ளார்கள் சம்பவம் தொடர்பாக குறித்த இடத்துக்கு சென்ற உதவி முகாமையாளர் மற்றும் தோட்ட காவலாளியும் சென்றிருந்த வேளை உதவி முகாமையாளர் குறித்த குடியிருப்பை உடைத்து அதில் இருந்த பொருட்களையும் சேதபடுத்தியுள்ளார்.

## எம்மை பாதுகாக்க திருப்பி அடிக்கலாம்

நீதியரசர் இளஞ்செழியன் தனது தீர்ப்பு ஒன்றில், தற்காப்புக்காக திருப்பி அடிக்கும் உரிமையின் சட்டவரம்பு பற்றி கூறியுள்ளார். அதையே நான் இங்கு பிரதிபலிக்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும், அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களை கண்டும் காணாமல் இருக்கிறது.

ஆகவே பெருந்தோட்டங்களில் எமது மக்களின் இயல்பு வாழ்கைக்கு உத்தரவாதம் தராவிட்டால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தையில் கலந்துக்கொள்ளும் முடிவை மறுபரிசீலனை செய்யும்” என்றார்.

**“ ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார். ஆனால், நாம் பலமுறை சொல்லியும், அவரது அரசு, எமது மக்களுக்கு எதிராக பெருந்தோட்ட நிர்வாகங்கள் நடத்தும் அராஜகங்களை கண்டும் காணாமல் இருக்கிறது.**

## அடாவடி செய்ய முடியாது

**“ அதை செய்ய காலம் தாமதிக்கும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கையை எடுக்கப்படும்**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், “இவ்வாறான சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென கடந்த பாராளுமன்ற விவாதத்தில் விவாதித்த போதும் கூட இவ்வாறான சம்பவங்கள் தோட்டங்களில் இடம்பெறுகின்றது.

இதுபோல வெளிவராத பல அநியாயங்கள் பல தோட்டங்களில் எமது மக்களுக்கு இடம்பெறுகின்றது. குறித்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தோட்டத்துரையை பாதிக்கப்பட்ட குடும்பத்திடம் மன்னிப்பு கேட்க வேண்டுமென பெருந்தோட்ட அமைச்சர் ரமேஸ் பத்திரண கூறியுள்ளார்.

ஆனால் எமக்கு தேவை மன்னிப்பு கிடையாது. உடனடியாக சம்மந்தப்பட்ட துரை பணி நீக்கம் செய்யப்பட வேண்டுமெனவும் அமைச்சர் ரமேஸ் பத்திரணவிடம் தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும் அதை செய்ய காலம் தாமதிக்கும் பட்சத்தில் சட்ட ரீதியான நடவடிக்கையை எடுப்பதாகவும் ராதாகிருஸ்ணன் எம்.பி தெரிவித்துள்ளார்.

## குத்தகைக்கு வழங்கவில்லை

ரத்வத்த கீழ்பிரிவு தோட்ட அதிகாரிக்க வழங்கப்படக் கூடிய தண்டனை ஏனையவருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மாத்தளை, எல்கடுவ பிளான்டேசன் ரத்வத்த கீழ்பிரிவில், மூன்று குடும்பங்கள் உள்ளடங்கலாக 14 பேர் வசித்து வந்திருந்த குடியிருப்பை சனிக்கிழமை (19) தனது அதிகாரிகள் சகிதம் வருகை தந்த உதவி முகாமையாளர், உடைத்து பொருட்களுக்கும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து வடிவேல் சுரேஷ் எம்.பி ஞாயிற்றுக்கிழமை (20) வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது.

“இன்று வீடற்று பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனாதையாக நிற்கதியாக நிற்கின்றனர். சமூக வலைத்தளங்களில் அக்காணொளி அனைவரினாலும் பகிரப்பட்டு வருகின்றது .

200 வருடங்களாக நாட்டின் பொருளாதாரத்தை தன்னுடைய முதுகெலும்பு தேயும் வரை தோளில் சுமந்த ஒரு சமூகத்தை நடுத்தெருவில் நிறுத்தி வேடிக்கை பார்க்கின்றோம். பொறுமை கடந்து விட்டது. அடாவடி நிர்வாகத்துக்கு சாட்டை அடியே பதில்.

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விடயத்தில் ஒற்றுமையாக கரம் கோர்த்து செயல்பட வேண்டும் .

இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கும் வேண்டும். இல்லையேல் தோட்ட நிர்வாகத்தினர் பாரியதொரு புரட்சி போராட்டத்தை எதிர்கொள்ள நேரிடும் என்றார்.

மேர்வின் சில்வாவின் கூற்று

# "தூண்டிவிடும் செயல்"

## சீ.வை.பி ராம் கண்டனம்: அரசாங்கத்தையும் தூற்றினார்

வடக்கு கிழக்கில் உள்ளவர்கள் விகாரைகள் மற்றும் மகாசங்கரத்தினர் மீது கைவைத்தால் அவர்களின் தலையை களனிக்கு கொண்டுவருவதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருக்கும் கூற்று தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டிவிடும் செயல் அதனை நாங்கள் வன்மையாக கண்டிப்பதுடன் அரசாங்கம் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் மேல் மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான சீ.வை.பி. ராம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அனைத்து மக்களுக்கும் தங்களின் உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள போராடும் உரிமை இருக்கிறது என்று சுட்டிக்காட்டிய அவர், அதனை யாருக்கும் தடுக்க முடியாது. என்றாலும் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அண்மைக்காலமாக அங்குள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மற்றும் கோயிகள் தொல்பொருள் ஆய்வு என்ற பேரில் அரசாங்கம் கைப்பற்றி வரும் நடவடிக்கையை நாங்கள் அதவதானித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.



இந்த விடயங்களில் அந்த பிரதேசத்தில் இருக்கும் தேரர்களும் சம்பந்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் அந்த மக்கள் தங்களின் வழிபாட்டு தலங்கள் மற்றும் காணிகளை பாதுகாத்துக்கொள்ள போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அது அந்த மக்களின் உரிமை அதனை யாராலும் தடுக்க முடியாது. அதேநேரம் வடக்கு கிழக்கில் உள்ள பௌத்த விகாரைகளுக்கோ அங்குள்ள தேரர்களுக்கோ யாரும் கை வைத்ததாக இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சில சந்தர்ப்பங்களில் பொலிஸாரின் பக்கச்சார்பான நடவடிக்கைகளின் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குருந்தூர் மலை விவகாரம் மற்றும் அங்குள்ள இந்துக்கோயில்களில் மக்கள் வழிபாடுகளில் ஈடுபடும்போது அதற்கு தடைகளை ஏற்படுத்தியதாலே பிரச்சினைகள் தலைதூக்கி இருக்கின்றன என்றார்.

மேர்வின் சில்வா போன்றவர்களின் கருத்துக்களை கேட்டுக்கொண்டிருக்காமல் நாட்டில் அனுமதிக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ள அவர், அதன் மூலமே தமிழ் மக்களுக்கு அரசாங்கம் மீது நம்பிக்கை ஏற்படும். 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைக்கு கொண்டுவருவதில் தொடர்ந்தும் இழுத்தடிக்கக்கூடாது என்றும் ஜனாதிபதியை கேட்டுக்கொண்டுள்ளார்.

## பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் 2023/2024 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சங்கத்தின் தலைவராக ஸ்ரீ ரணசிங்க (லங்காதீப), செயலாளராக மொஹான்லால் பியதாஸ (தேசய), பொருளாளராக எஸ்.ஸ்ரீகஜன் (வீரகேசரி), உதவிச்செயலாளராக மந்தனா ஸ்மயில் அபயவிக்கிரம (சண்டே லீடர்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

உயர்மட்டக்குழு உறுப்பினர்களாக மெனிக் டி சில்வா (சண்டே ஐலன்ட்), சிங்க ரணதுங்க (சண்டே டைம்ஸ்), பிரபாத் சகபந்து (டெய்லி ஐலன்ட்) ஆகியோரும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக நிஸ்தார் ஹாசிம் (டெய்லி எப்.டி), காஞ்சன தசநாயக்க (சண்டே லங்காதீப), கே.டபிள்யூ. ஜெயரஞ்சன (அனித்தா), தர்மன் விக்கிர மரத்ன (சிலுமின), மஹிந்த இளையப்பெரும (சண்டே அருண) ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

## மருந்துகடை மருந்தை உட்கொண்டவர் மரணம்

தனியார் மருந்து கடையொன்றினால் வழங்கப்பட்ட மருந்தை உட்கொண்ட நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (20) உயிரிழந்துள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிய, உருகல பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய டபிள்யூ. லீலாரத்ன என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொலஸ்ட்ராலுக்கு வைத்தியர் பரிந்துரைத்ததன் பிரகாரம் குறித்த மருந்தகத்தினால் அவருக்கு மருந்து வழங்கப்பட்டதாகவும், கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் குறித்த மருந்தை உட்கொண்டுள்ளதாகவும் ஆரம்பக்கட்ட பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

இது தவறான மருந்தினால் ஏற்பட்ட மரணமா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## கசமோறாவுடன் ஒருவர் கைது

**அஸ்ஹர் இப்றாஹிம்**

மீன்பிடித்துறையில் மீனவர்களால் பிடிக்க தடை செய்யப்பட்ட சவுக்கு சுறா (கசமோறா )மீன்கள் 33 கிலோ கிராமை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை கடற்படையினர் கைது செய்து திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

தனது தவறை ஒப்புக்கொண்ட



சந்தேக நபருக்கு திருகோணமலை பிரதான நீதவான் இஸ்மாயில் பயாஸ் றஸாக் 10,000 ரூபாய் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

சாம்பல் தீவு,சல்லிய பிரதேசத்திலுள்ள மீன் வாடியில் வைத்தே மீன்களுடன் இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மீன் வள மற்றும் நீர்வள திணைக்கள திருகோணமலை மாவட்ட உதவி பணிப்பாளர் இஸார கண்காணம்கேவின் உத்தரவின் பேரில் அபிவிருத்தி உத்தியோஸ்தர் ஏ.சஜீவன் சந்தேக நபரை கைது செய்ய உதவி புரிந்தார்.

## சீனிப் பாணியை தேனாக விற்றவர் மடக்கிப் பிடிப்பு

**ரீ.எல்.ஜவ்பர்கான்**


காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு உட்பட்ட புதிய காத்தான்குடியில் உள்ளூர் சுற்றுலா பயணிகளுக்கு சீனிப்பாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி விற்பனை செய்த நபர் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை காலை(20) சுகாதாரத் துறையினரால் மடக்கி பிடிக்கப்பட்டார்

குறித்த நபர் தப்பியோடிய போதிலும் அவரிடம் இருந்து ஆறுக்கும் மேற்பட்ட சீனிப்பாணிகளைக் கொண்ட போத்தல்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட சீனிப்பாணிகளை கொண்ட போத்தல்கள் குறித்த இடத்திலேயே உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

புதிய காத்தான்குடி அல் அக்சா பள்ளிவாயலுக்கு வருகின்ற உள்ளூர் சுற்றுலா பயணிகளை ஏமாற்றி குறித்த நபர் சீனி பாணியை சுத்தமான தேன் என ஏமாற்றி ஒரு போத்தல் 2000 ரூபாய் வரை விற்பனை செய்து வந்திருக்கிறார்.





## பெண்களை மயக்கமடைய செய்து கழுத்தணிகளை திருடும் கும்பல் சிக்கியது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

பெண்களை மயக்கமடையச் செய்து. அப்பெண்களின் நகைகளை கொள்ளையடிக்கும் திட்டமிட்ட திருடர்கள் கும்பலை ஹட்டன் பொலிஸ் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சனிக்கிழமை (19) கைது செய்துள்ளனர்.

ஹட்டன் நகரிலுள்ள விழா மண்டபமொன்றில் கடந்த (12) ஆம் திகதி இடம்பெற்ற விழாவுக்கு வந்திருந்த பெண்ணுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்ட மற்றுமொரு பெண், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட மற்றுமொரு பெண், குறித்த பெண்ணை வீட்டுக்கு அழைத்துச் செல்வதாக தெரிவித்துள்ளார்.

இதனை நம்பி அப்பெண்ணும் முச்சக்கரவண்டியில் ஏறிக்கொண்டாள். இடையில் இரண்டு ஆண்களும் அந்த முச்சக்கரவண்டியில் ஏறிக்கொண்டனர்.

தண்ணீரை குடித்துவிட்டு பெண் மயங்கிய நிலையில் பெண்ணின் கழுத்தில் இருந்த சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டரை பவுண் தங்க செயினை திருடிவிட்டு அப்பெண்ணை டிக்கோயா -சஞ்சிமலை வீதியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் விட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மயக்கமடைந்த பெண்ணை அவ்வீதியில் பயணித்த சிலர் டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். பெண் சுயநினைவு திரும்பியதையடுத்து சம்பவம் தொடர்பில் ஹட்டன் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம், ஹட்டன் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிசிடிவி காட்சிகள் ஊடாக விசாரணைகளை ஆரம்பித்து முதலில் முச்சக்கரவண்டியைக் கைப்பற்றினர். அதன்பின்னர், மேலும் இரு சந்தேக நபர்களையும் திருடுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதன் பின்னர், சந்தேகநபர்களிடம் இருந்த திருடப்பட்ட 2 பவுன் தங்க நகையும், 60,000 ரூபாய் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் ஹட்டன் மற்றும் நாவலப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர்கள், சந்தேக நபர் வட்டவளை பொலிஸ் பிரிவில் வசிப்பவர் மற்றும் சந்தேக நபர்கள் 27-45 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் இவர்கள் பல திருட்டு சம்பவங்களில் பல பொலிஸ் நிலையங்களால் தேடப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும், இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் ஏனைய சந்தேகநபர்களும் கைது செய்யப்படவுள்ளதாக ஹட்டன் பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்சித் ஜயசேன தெரிவித்தார்.

## அலைபேசியுடன் தண்டவாளத்தில் பயணித்த யுவதி அகால மரணம்

**கௌசல்யா, ரஞ்சித் ராஜபக்ஷ**

அலை பேசியில் பேசிக் கொண்டே தண்டவாளத்தில் பயணித்த யுவதி ஒருவர், சனிக்கிழமை (19) மாலை 4.30 மணியளவில் புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளதாக திம்புள்ள- பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் குடாகம பகுதியைச் சேர்ந்த ஜெகநாதன் மேகா என்ற (17) வயதுடைய யுவதியே புகையிரதத்தில் மோதி உயிரிழந்துள்ளார்.

ஹட்டனிலிருந்து கொட்டகலை நோக்கிப் பயணித்த யுவதி தண்டவாளத்தில் அலைபேசியில் பேசிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார், ஹட்டனுக்கும் கொட்டகலைக்கும் இடையிலான 60 அடி



பாலத்திற்கு அருகில் பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற 1008 ஆம் இலக்க ரயிலில் மோதி யுவதி உயிரிழந்துள்ளார்

புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்த யுவதியின் சடலத்தை புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ரயிலில் ஏற்றினர். அந்த ரயில் கொட்டகலை ரயில் நிலையத்திற்கு மீண்டும் செலுத்தப்பட்டு அங்கு சடலம் ஒப்படைக்கப்பட்டது.

உயிரிழந்த யுவதியின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் திம்புள்ள- பத்தனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இலங்கையின் தொழிற்படையில் பெண்களின் குறைந்தளவான பங்கேற்பு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் மூன்று கூற்றுகளை முன்வைக்கிறார்:

1) ஊதியம் வழங்கப்படாத பணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பெண்களின் பங்கேற்பை தொழிற்படை பங்கேற்பு தொடர்பான உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் குறைத்து மதிப்பிடுகின்றன. 2) ஊதியம் இல்லாத பராமரிப்பு பணிகளில் 60% பெண்களால் செய்யப்படுகிறது. 3) ஆண்களை விட பெண்கள் (14 மணித்தியாலங்கள்) நாளொன்றுக்கு அதிக நேரம் வேலை செய்கிறார்கள்.

இந்தக் கூற்றுக்களைச் சரிபார்க்க, சமீபத்திய தரவான தொழிற்படை கணக்கெடுப்பு (LFS) 2021, இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் இலங்கை நேரப் பயன்பாடுகள் தொடர்பான கணக்கெடுப்பு (SLTUS) 2017 மற்றும் WMC இன் பணி நேரங்கள்: இலங்கையில் ஊதியம் வழங்கப்படாத பராமரிப்பு பணிகளின் பாலின பரிமாணங்களை ஆராய்தல் எனும் புத்தகத்தையும் FactCheck.lk ஆராய்ந்தது.

கூற்று 1: இலங்கையின் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடக்கூடிய தொழிற்படையில் இருப்பவர்கள் மற்றும் வேலையில் இல்லாதவர்கள் (வேலை தேடிக்கொண்டிருப்பவர்கள்) என இரண்டு முக்கிய வகைகளாக பட்டியலிடப்படுகிறது. வேலையில் உள்ளவர்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள்: தொழிலாளர்கள், தொழில்தருனர்கள், சொந்தமாக வேலை பார்ப்பவர்கள் மற்றும் ஊதியமற்ற குடும்பப் பணியாளர்கள் (மேலதிகக் குறிப்பு1). இந்த தொழிற்படையில் உள்ளவர்கள் சந்தையில் விற்கவோ பரிமாற்றத்திற்கோ பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதில் பங்கேற்கிறார்கள். இவ்வாறான பணிகள் தேசிய கணக்குகள் அமைப்பு கட்டமைப்பில் (SNA) உள்வாங்கப்படுவதுடன் இவை SNA செயல்பாடுகள் என அறியப்படுகிறது. எனவே தொழிற்படைக்கான பங்கேற்பை மதிப்பிடும்போது SNA அல்லாத செயல்பாடுகளில் (ஊதியமற்ற வீட்டுவேலை, பராமரிப்பு வேலை மற்றும் தன்னார்வப் பணிகள் உட்பட) செலவிடப்படும் நேரம் கணக்கில் கொள்ளப்படுவதில்லை. உத்தியோகபூர்வ தொழிற்படை புள்ளிவிபரங்களில் SNA அல்லாத செயல்பாடுகள் தவிர்க்கப்படுவதால் பாராளுமன்ற உறுப்பினரின் கூற்று சரியாக உள்ளது.

கூற்று 2: தேசிய கணக்கெடுப்பான 2017 SLTUS ஊதியமற்ற பணிகளில் பெண்கள் 5.7 மணித்தியாலங்களும் ஆண்கள் 1.6 மணித்தியாலங்களும் செலவிடுவதாகக் குறிப்பிடுகிறது (அட்டவணை 2). எனினும் இலங்கையின் ஆறு மாவட்டங்களில் (40%) WMC முன்னெடுத்த மற்றொரு கணக்கெடுப்பில் பெண்கள் 9.14 மணித்தியாலங்களும் ஆண்கள் 5.96 மணித்தியாலங்களும் சராசரியாக ஒரு நாளில் ஊதியமற்ற வீட்டுவேலை, பராமரிப்பு மற்றும் தன்னார்வ பணிகளுக்காகச் செலவிடுவதாகத் தெரிவிக்கிறது. இந்தப் பெறுமதிகளைப் பயன்படுத்திக் கணக்கிட்டால் 60% ஊதியம் செலுத்தப்படாத பராமரிப்பு பணிகளுக்குப் பெண்கள் பங்களிக்கின்றனர் (9.14/15.1). 60% என்பதைக் கணக்கிடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் WMC கணக்கெடுப்பின் புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது. SLTUS புள்ளிவிபரங்களின் பிரகாரம், ஊதியமற்ற பராமரிப்பு பணிகளில் பெண்களின் பங்களிப்பு 81% என்பது பாராளுமன்ற உறுப்பினரின் கூற்றுக்கு மேலும் வலுச்சேர்க்கிறது (மேலதிகக் குறிப்பு 2).

கூற்று 3: பா. உவின் கூற்று ஆண்கள் மற்றும் பெண்களின் மொத்த வேலை நேரங்களைக் குறிப்பிடுகிறது. SLTUS தரவின் பிரகாரம், ஊதியம் பெறப்படும் மற்றும் பெறாத வேலைகளில் பெண்கள் 7.9 மணித்தியாலங்களும் ஆண்கள் 7.3 மணித்தியாலங்களும் செலவிடுகின்றனர். நாளொன்றில் ஆண்களை விட பெண்கள் அதிக நேரம் வேலை செய்வதாகக் குறிப்பிடும் பா. உவின் கூற்றை இந்தத் தரவு ஆதரிக்கிறது. எனினும் WMC கணக்கெடுப்பில் இருந்து பெறப்பட்ட தரவை பா. உ குறிப்பிடுகிறார். இது ஊதியமற்ற பராமரிப்பு பணிகளை (பெண்களுக்கு 13.77 மணி. மற்றும் ஆண்களுக்கு 8.98 மணி.) மட்டுமே குறிப்பிடுகிறது. இது திருத்தப்படாத புள்ளிவிபரம் ஆகும். இறுதிசெய்யப்பட்ட புள்ளிவிபரம் கூற்று இரண்டை ஆராய்வதில் குறிப்பிடப்பட்டுள்ளது (பெண்கள் 9.14 மணி. மற்றும் ஆண்கள் 5.96 மணி).

மொத்த வேலை நேரம் (நாளொன்றுக்கு 14 மற்றும் 9 மணி.) தொடர்பில் பா. உ. குறிப்பிடும் ஒரு எண்ணிக்கையானது தவறான புரிதலை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அவர் முன்வைக்கும் மூன்று கூற்றுகளும் ஒட்டுமொத்த வாதமும் சரியானது என்பதை கிடைக்கக்கூடிய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதாவது ஆண்களை விட பெண்கள் நாளொன்றுக்கு அதிக நேரம் வேலை செய்கிறார்கள் என்பதுடன் ஊதியமற்ற பராமரிப்பு வேலைகளில் பெரும்பங்கை பெண்களே செய்கிறார்கள். எனினும் தொழிற்படை பங்கேற்பை அளவிடுதில் காணப்படும் கட்டுப்பாடுகள் காரணமாக பெண்கள் தொழிற்படையில் குறைவாகப் பங்களிப்பதாக மதிப்பிடப்படுகிறது.

எனவே அவரது அறிக்கையை நாங்கள் சரியானது என வகைப்படுத்துகிறோம்.

FactCheck.lk தளம் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. மேலும் உண்மை சரிபார்ப்புகளைப் பார்க்க FactCheck.lk இணையதளத்தைப் பார்க்கவும்

'தொழிற்படையில் பங்கேற்பை அளவிடும்போது சில காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை" பெண்களால் செய்யப்படும் ஊதியம் பெறப்படாத பெரும்பாலான வேலைகள் இந்தப் புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படுவதில்லை. ஆராய்ச்சியின் மூலம் முன்வைக்கப்படும் புள்ளிவிபரங்களின் பிரகாரம், 60 சதவீதமான பராமரிப்பு வேலைகள், அதாவது ஊதியமற்ற வேலைகள், பெண்களால் செய்யப்படுகின்றன. இந்தப் பணிகளைச் செய்வதுடன் அவர்கள் மேலதிகமாக பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள். ஆராய்ச்சி அதனைக் காட்டுகிறது பெண்கள் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 14 மணித்தியாலங்கள் வேலை செய்கிறார்கள். ஆண்கள் 9 மணித்தியாலங்கள் மட்டுமே வேலை செய்கிறார்கள். இந்த யதார்த்தத்தின் பின்னணியில் பெண்கள் வேலை செய்யும் நேரத்தை அதிகரிக்க வேண்டும் என நாங்கள் முன்மொழிகிறோம்.

மூலம்: NPP உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் NPP ஊடக சந்திப்பு | ஜூலை 16, 2023

# வனஜீவராசிகள் சட்டம் குறித்த தெளிவூட்டல் போதாது

மனிதன், சுற்றாடலுக்கு அமைவாக எளிமையான வாழ்க்கைப் போக்கினை கழித்த முற்காலத்தில் இயற்கை வளங்கள் மீது அபரிமிதமான கவனஞ்செலுத்தினான். இன்றைய நிலைமையை அவதானிக்கும் போது, நிலைமை தலைகீழாக மாறி நிற்கிறது.

ஒட்டுமொத்த உயிரினங்களுக்கும் நீண்டகால வாழ்வுரிமைக்கு சாதகமான வாய்ப்பினை பெற்றுக்கொடுத்த இயற்கையானது, நிகழ்காலத்தில் வித்தியாசமான வழியில் பயணிப்பது புலப்படுகின்றது. இதற்கான பொறுப்பினை உலகின் உயிரினங்களில் ஒன்றான மனிதன் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இயற்கையின் மீது மனிதன் செலுத்திய, செலுத்துகின்ற ஆக்கிரமிப்பால், பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம், வறட்சியான காலத்தில், காடுகளை பற்றவைத்தால் அதிலிருந்து மேலெழும் வெப்பம், தண்ணீரை உறிஞ்சிச் சென்று, மழையாக பொழியும் என்ற மடமைத்தனமான சிந்தனையைக் களையவேண்டும்.

அதனூடாகவே வறட்சியான காலப்பகுதியில், காடுகள் மற்றும் பற்றைக் காடுகளுக்கு தீ மூட்டப்படுவதை தவிர்க்கமுடியும். அத்துடன் காடுகள் மற்றும் வனஜீவராசிகள் பேணலுக்கான சட்டத்தையும் மீறினால் வழங்கப்படும் தண்டனை தொடர்பிலும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் அவசியமாகும்.

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால், 60,990 குடும்பங்களைச் சேர்ந்த 210,796 குடும்பங்கள் ஞாயிற்றுக்கிழமை (20) வரையிலும் பாதிக்கப்பட்டுள்ளன என இடர் முகாமைத்துவ நிலைய புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காடுகளில் மரங்களின் இலைகள் உதிர்கின்றன. சிறுசிறு குளங்கள் நீரோடைகள் வற்றுகின்றன. நீர்வரத்துகள் குறைகின்றன. வெப்பத்தின் தாக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மனிதன் மட்டுமன்றி விலங்குகளும் ஊர்வனவும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. தாகத்தை தணித்துக்கொள்ள பல சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றன.

புவி வெப்பமடைதல், சமுத்திர நீர்மட்டம் உயர்வடைதல், நீண்டகால வறட்சி, மோசமான வெள்ளப்பெருக்கு ஆகியன காரணமாக உயிர்ப் பல்வகைமை அழிவடைக்கின்றது. இது உலகளாவிய ரீதியிலான செயற்பாடாகும்.

தற்போதைய வறண்ட காலநிலை காரணமாக, பல்வேறான தோல்நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாகும். அதேபோல, கண்களும் பாதிக்குமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதிலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்கான முன்னேற்பாடுகளை செய்யவேண்டிய நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இயற்கையை அழித்து வரண்ட நிலங்களாக்கி, நீரோடைகளை ஆக்கிரமித்து, இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்போமெனில், தற்போதையை தாக்கத்தை விடவும் பன்மடங்கான தாக்கத்துக்கு முகக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

மரமொன்றை வெட்டும் முன்னர், மரக்கன்றொன்றை நாட்டவேண்டும் என்ற சிந்தனையை ஒவ்வொரு மனிதனின் மனங்களிலும் விதைக்கவேண்டும். காடுகள் அல்லது பற்றைக்காடுகளை தீ வைத்தால், பல வகையான ஊர்வன தீயில் கருகி மடியும். அத்துடன், அரிய பல மரங்களின் வேர் அமைப்பும் தீயில் கருகிவிடும் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

காடுகளுக்குத் தீ வைப்போருக்கு எதிரான சட்டங்களை கடுமையாக்க வேண்டும். கைது செய்தோம், பிணையில் விட்டோம் என்றில்லாது, ஏனையோருக்கு பாடம் புகட்டும் வகையில் தண்டனையை வழங்கவேண்டும்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

விழிப்பும் உறக்கமும் ஒவ்வொரு நாளும் நடப்பதாகும். எனினும் உண்மையான விழிப்புநிலை எமக்கானதும் இந்த உலகத்துக்கானதுமாகும்.

எமக்காக மட்டும் வாழ்தல் வெறும் உறக்கத்துடன் மட்டும் சஞ்சரிப்பது மட்டுமேயாகும். கடமைகளைச் செய்யாதவன் விழித்தபடியும் உறங்கியபடியும், தான் பிறந்த இந்த உலகத்துக்கு எதுவும் செய்யாமல் வாழ்கின்றான். தாங்கும் பூமித்தாய்க்கு பாரமாக இருத்தல் ஆகாது!

பிறர் செய்யும் சேவைகளைப் பார்த்தாவது, தன்னைத்தான் உணரவேண்டும். சுறுசுறுப்பாக வேலைசெய்வதைவிட சந்தோசம் வேறொன்றும் இல்லை.

நிகழ்கால உழைப்பே வருங்கால வருமதியாகும். வினாடிப் பொழுதும் வீணாகத் தேயக்கூடாது. சின்ன வயதிலேயே கல்வியுடன் இணையவேண்டும். வாலிபம் வந்து கருமங்களைச் செய்யுமபோது, நாம் பூமிக்கான சேவைகளுக்காக ஒரு பகுதியை ஒதுக்க வேண்டும்.

உயிர் பிரிந்தாலும் சேவை செய்பவன் மரணிப்பதில்லை. நற்பணி செய்பவர்களுக்கு கால வேறுபாடுகள் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

“மலையகம் 200”:

# இந்திய வம்சாவளி மக்களுக்கு எதிராக செயற்பட்டாரா ஜீ.ஜீ.பொன்னம்பலம்?



என்.கே.அஷோக்பரன்

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மலையகம் 200 எனும் தொனிப்பொருளின் கீழ் பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் அரச, மற்றும் அரச சாரா நிகழ்வுகள் எல்லாம் உள்ளடக்கம். இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்று மலையக மக்கள் தொடர்ந்து விளிக்கப்பட்டாலும், அவர்களின் பொருளாதார நிலை உயர்ந்தபாடில்லை. இந்நாட்டின் குடிமக்களில் ஒரு பகுதியினர் தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதை எத்தனை காலத்திற்கு இந்த நாடும், நாட்டு மக்களும் சகித்துக்கொண்டிருக்கப் போகிறார்கள்? நிற்க.

இந்த நாட்டின் “குடிமக்கள்” என்று குறிப்பிடும் போது, இந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக்கொள்ள இந்திய வம்சாவளி மக்கள் பட்டபாடும், அதனை அடைந்து கொள்வதற்கான மிக நீண்ட அரசியல் போராட்டத்தையும் நாம் மறந்துவிட முடியாது. இந்த தலைப்பு வரும்போதெல்லாம், ஜீ.ஜீ.பொன்னம்பலம் மீதான ஓர் அவதூறும் மீண்டும் மீண்டும் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகிறது. அதாவது, இந்திய வம்சாவளி மக்களுக்கான குடியுரிமை மறுப்பை ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரித்தார் என்ற அந்த அவதூறு, ஜீ.ஜீ. பொன்னம்பலத்தையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸையும் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களையும் ஒரவஞ்சனையாளர்களாக சித்தரித்து விடுகிறது. ஆகவே இந்த விடயத்தில் உண்மை என்ன என்பதை அறிந்து கொள்வது அவசியமாகிறது.

இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதை ஜீ.ஜீ. ஆதரவளித்தார் என்ற பிரசாரம், ஜீ.ஜீ., டீ.எஸ்.சேனநாயக்க தலைமையிலான அரசாங்கத்தோடு, “எதிர்வினை-ஒத்துழைப்பு” அடிப்படையில் இணைந்துகொண்டு, அமைச்சுப்பதவியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஜீ.ஜீ-யின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து பிரிந்து ஆங்கிலத்தில் “ஃபெடறல் பாட்டி” என்றும், தமிழில் “இலங்கை தமிழரசுக் கட்சி” என்றும் பெயர்கொண்ட கட்சியை சா.ஜே.வே.செல்வாநாயகமும், அவரது ஆதரவாளர்களும் தொடங்கியதிலிருந்து, அவர்களால் கடுமையாக ஜீ.ஜீ-க்கு எதிராக செயல்கள் முன்னெடுக்கப்பட்டது.

இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை தொடர்பில் ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்ன செய்தார், அவர் இழைத்த தவறு என்ன என்பது பற்றி இங்கு ஆராய்தல் அவசியமாகிறது. இந்திய வம்சாவளித் தமிழர் தொடர்பில் ஜீ.ஜீ. அக்கறையற்றுச் செயற்பட்டவராக இருக்கமுடியாது. ஏனெனில் அவர், ஆற்றிய 50-ற்கு 50 உரையிலாகட்டும், சோல்பரி குழு முன்பு ஆற்றிய உரையிலாகட்டும், இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் சம உரிமை, பிரதிநிதித்துவ ஒதுக்கீடு பற்றியெல்லாம் பேசியவர். குறிப்பாக சோல்பரி குழு தமிழ்க் காங்கிரஸின் சாட்சியத்தைக் கேட்பதற்கென ஒதுக்கிய மூன்று நாட்களில், ஒருநாள் முழுவதையும் ஒதுக்கி இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகள் பற்றியும், அவர்களுக்கான பிரதிநிதித்துவம் பற்றியும் பேசினார் ஜீ.ஜீ.

ஆகவே, இந்திய வம்சாவளித் தமிழர்கள் தொடர்பில் ஜீ.ஜீ. அக்கறையற்றிருந்தார் என்று சொல்லமுடியாது. அப்படியாயின் அம்மக்களின் பிரஜாவுரிமை பறிபோவதற்குக் காரணமான சட்டங்களுள் ஒன்றுக்கு ஜீ.ஜீ. ஆதரவளித்தாரா? அப்படி ஆதரவளித்தாராயின் அதன் மூலம் அம்மக்களுக்கு ஜீ.ஜீ பெரும் அநீதி இழைத்துவிட்டாரல்லவா? என்ற கேள்வி நிச்சயம் எழுகிறது.

இந்த விஷயம் கொஞ்சம் சிக்கலானது. ஆனால், எளிமையாக புரியவைக்க முயல்கிறேன். இங்கே இரண்டு சட்டங்கள் முக்கியம் பெறுகின்றன. முதலாவதாக 1948ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இலங்கை பிரஜாவுரிமைச்சட்டம், மற்றையது 1949ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம்.

பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் கீழ் கொலனித்துவ நாடுகளிலுள்ள அனைத்து மக்களும் பிரித்தானிய முடியின் குடிமக்களாக இருந்தார்கள். கொலனித்துவத்திலிருந்து நாடுகள் சுதந்திரம் பெற்றபோது ஒவ்வொரு சுதந்திர நாடும் தமக்கென குடியுரிமைச் சட்டத்தை வரைந்து கொள்ளுதல் அவசியமானது. அவ்வகையில் 1948இல் அன்றைய டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், இலங்கை பிரஜாவுரிமைச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இது சமர்ப்பிக்கப்பட்டபோது ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், எதிர்க்கட்சியில் இருந்தது.

குறித்த சட்டமூலமானது பின்வருமாறு வழங்கியது:

(அ) இலங்கையில் பிறந்த ஒருவருடைய தகப்பன் இலங்கையில் பிறந்தவராகவோ, அல்லது

(ஆ) அவருடைய தந்தை வழிப் பேரனும், தந்தை வழிப்பாட்டனும் இலங்கையிற் பிறந்தவர்களாகவோ இருந்தால், அவர் இலங்கைப் பிரஜையாகவே கருதப்படுவர். அத்துடன்,

(இ) இலங்கைக்கு வெளியே பிறந்தவர் இலங்கைப் பிரஜையாக மதிக்கப்பட வேண்டுமேயானால் அவருடைய தந்தையும், தந்தை வழிப் பேரனும் இலங்கையிற் பிறந்திருத்தல் வேண்டும். அல்லது,

(ஈ) அவரின் தந்தை வழிப்பேரனும், பாட்டனும், இலங்கையில் பிறந்திருத்தல் வேண்டும்.

இச்சட்டமூலம் இந்திய வம்சாவளி மக்கள் பிரஜாவுரிமையைப் பெறமுடியாத நிலையை ஏற்படுத்தியது. இதனை அப்போது எதிர்க்கட்சியில் இருந்த ஜீ.ஜீ. பொன்னம்பலம் கடுமையாக எதிர்த்தார். இதனைக் கடுமையாக எதிர்த்து அவர் பேசியது 1948ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி பாராளுமன்ற ஹன்சார்டின் 1821 - 1861 பக்கங்களில் பதிவாகியுள்ளது.

இதனை இலங்கை-இந்திய காங்கிரஸ் கட்சியும், ஏனைய இடதுசாரிக் கட்சிகளும் கூட கடுமையாக எதிர்த்தன. ஆகவே, இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை பறிபோவதற்கு ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆதரவளித்தார் என்பதில் உண்மையில்லை. மாறாக, அனைத்துத் தமிழ்க் கட்சிகளைப் போலவும் அவர் அன்று அதனை மிகக் கடுமையாக எதிர்த்தார் - எதிர்த்தே வாக்களித்தார். ஆயினும் அன்றைய அரசாங்கத்திடம் பெரும்பான்மை இருந்ததால், அது அச்சட்டத்தை நிறைவேற்றியது.

இதன் பின்னர், ஜீ.ஜீ.பொன்னம்பலம் - அன்றைய பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கவுடன் எதிர்வினை - ஒத்துழைப்பு’ வழங்குவது பற்றிப் பேச்சு நடத்தியபோது, பிரஜாவுரிமை இழந்த இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் முக்கிய கோரிக்கையாக வைத்திருந்தார். அதனை அன்றைய பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்க ஏற்றுக்கொண்டிருந்தார். அதன்பின்னர் அன்றைய அரசாங்கத்தில் இணைந்து அமைச்சரவை அமைச்சரானார் ஜீ.ஜீ.பொன்னம்பலம். பிரஜாவுரிமை இழந்த இந்திய வம்சாவளி மக்களுக்கு பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொடுப்பதாகத் தான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற டீ.எஸ்.சேனநாயக்க 1949ஆம் ஆண்டில் இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டமூலத்தின்படி இலங்கையில் குடும்பமாக ஏழு வருடங்கள் வசித்தவர்களும், விவாகமாகாமல், பத்து வருடங்கள் வசித்தவர்களும் பிரஜாவுரிமை பெறுவதற்கு உரிமை பெற்றார்கள். இலங்கை-இந்திய காங்கிரஸும், தமிழ்க் காங்கிரஸும் ஏழு வருட காலப்பகுதியை, ஐந்தாகக் குறைக்கக் கோரின. ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த சட்டமூலம் சட்டமானால் ஏறத்தாழ பிரஜாவுரிமையை இழந்த இந்திய வம்சாவளி மக்கள் ஒரு லட்சம் (100,000) பேர் பிரஜாவுரிமையைப் பெறக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது. இந்த சட்டமூலத்துக்குத்தான் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆதரவாக வாக்களித்திருந்தார். இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் இழைத்த அநீதியை, இந்திய-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் முற்றாக சரிசெய்து விடவில்லை. அது ஒரு முழுமையான தீர்வுமில்லை. ஆனால் இலங்கை பிரஜாவுரிமைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில், ஏறத்தாழ ஒரு லட்சம் பேருக்கென்றாலும் பிரஜாவுரிமை கிடைக்க இந்திய-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் வழிவகுத்ததனால், ஜீ.ஜீ. அதனை ஆதரித்திருக்கலாம்.

உண்மையில் இதைவிட நியாயமான, முழுமையான தீர்வொன்றுக்காக ஜீ.ஜீ. பொன்னம்பலம் உழைத்திருக்க வேண்டும். ஆனால், இந்திய வம்சாவளி மக்களின் பிரஜாவுரிமை பறிபோக ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆதரவளித்தார் என்ற கருத்தில் உண்மையில்லை. ஏனெனில், அந்த சட்டமூலத்தை ஜீ.ஜீ.பொன்னம்பலம் கடுமையாக எதிர்த்திருந்தார். மாறாக இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட ஒருதொகை இந்திய வம்சாவளி மக்களுக்கேனும் பிரஜாவுரிமை வழங்கிய இந்திய - பாகிஸ்தானியர் பிரஜாவுரிமை சட்டத்துக்கே அவர் ஆதரவளித்திருந்தார் என்பதே நிதர்சனம்.

“ஃபெடறல் பாட்டி” என்ற “இலங்கை தமிழரசுக் கட்சி”, தன்னுடைய அரசியல் குறு-இலாபத்திற்காக ஜீ.ஜீ. பொன்னம்பலத்திற்கு எதிராக தொடங்கிய ஒரு பிரசாரம், தேவையற்றதொரு கறையாக இலங்கைத் தமிழர் அரசியல் மீதே படிந்துள்ளது. இனியாவது, இந்தப் பிரசாரத்தின் பொய்மை உணரப்பட வேண்டும். “மலையகம் 200”, இந்தத் தீவில் 200 வருடங்களாக ஒடுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரலை அனைவரிடமும் கொண்டு போய்ச்சேர்க்கட்டும். அம்மக்களுக்கு விடிவு பிறக்கட்டும்!

## கடிதங்கள்

### வைத்தியர்களின் அசமந்த போக்கு

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட முழங்காவில் பகுதியில் கால்நடை வைத்தியர்களின் அசமந்த போக்கு காரணமாக வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட நான்கு கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பகுதியில்; வாழ்வாதார தேவைகளுக்காக வளர்க்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியதன நல்லின பசு மாடுகள் நான்கு அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன.

குறித்த பண்ணையாளர் ஒருவரது பசுமாடு நோய்வாய்ப்பட்ட நிலையில் பூனகரி கால்நடை வைத்தியரை குறித்த பண்ணையாளர் தொடர்பு கொண்டபோதும் வைத்தியர் குறித்த பகுதிக்கு செல்லாத நிலையில் குறித்த பசுமாடு உயிரிழந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து மறுநாள் அவரது மற்றைய பசுமாடும் அவ்வாறு நோய்வாய்ப்பட்ட நிலையில் பண்ணையாளர்களால் அவதானிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பில் பூநகரி பிரதேச கால்நடை வைத்தியருக்கு அறிவித்திருந்த போதும் மூன்று நாட்களாகியும் அதற்கான உரிய சிகிச்சைகள் வழங்கப்படவில்லை. தொடர்ந்தும் நான்காவது நாள் அந்தப் பசுமாடும் உயிரிழந்துள்ளது. இதனைவிட அப்பிரதேசத்தை சேர்ந்த மேலும் இருபண்ணையார்களின் பசுமாடுகளும் இவ்வாறு நோய்வாய்ப்பட்ட நிலையில் பூநகரி கால்நடை வைத்தியருக்கு அறிவித்தும் எதுவித சிகிச்சைகளும் வழங்கப்படாத நிலையில் அந்த கால் நடைகளும் உயிரிழந்துள்ளன.

ஆனாலும் இவ்வாறு கால்நடைகள் உயிரிழந்தமைக்கான மருத்துவ ரீதியான ஆய்வுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுப்ரமணியம் பாஸ்கரன்



# திகிலூட்டும் சாத்தானின் முக்கோணம்



இளங்கோவன் நிரோஷிகா
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஊடககற்கைகள் துறை

அறிவியலாளர்களுக்கும் விஞ்ஞானிகளுக்கும் அகப்படாத பல மர்ம ரகசியங்களை தன்னுள் பூட்டி வைத்துள்ளது இவ்வுலகம். அவ்வாறு நாம் அறியாத எத்தனையோ மர்மங்கள் இன்றளவிலும் வெளிவராமல் உள்ளன. அந்த வகையில் உலகின் விடையறியா வினாவாக உள்ள இடமான பெர்முடா முக்கோணம் எனும் பகுதி, பல மர்மங்களை புதைத்து வைத்துள்ளது. சாத்தானின் முக்கோணம் என அழைக்கப்படும் இந்த பெர்முடா முக்கோணம் எங்கு உள்ளது? இதன் மர்மம் என்ன? இங்குள்ள ஆபத்து என்ன? இந்த மர்மத்தின் பின்னால் உள்ள அறிவியல் என்ன? என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டியுள்ளது.

அட்லாண்டிக் பெரும் கடலில் மறைந்திருக்கிறது மர்மத்தின் பெட்டகமான இந்த பகுதி. விந்தையின் வினோதமாக திகழும் இந்த பெர்முடா முக்கோணம் பல வருடங்களுக்கு மேலாக தன் மர்மத்தை புதைத்து வைத்துள்ளது. ப்ளோரிடா (PLORIDA) ,போர்பொரிகோ (PUERTO RICO), பெர்முடா (BERMUDA) என்ன மூன்று முனைகளையும் இணைக்கையில் வரும் ஒரு முக்கோண வடிவத்திலான இடமே பெர்முடா முக்கோணம் ஆகும். பல்வேறான கட்டுக்கதைகளையும் மூடநம்பிக்கைகளையும் மத நம்பிக்கைகளையும் கேள்வியுற்று இந்த மர்ம பிரதேசத்தை கண்டு மக்கள் அஞ்சி நடுங்கினர். பயத்தின் உச்சத்துக்கு கொண்டு செல்லும் இந்த பகுதியில் அப்படி என்ன நடக்கின்றது? ஆம் , இந்த முக்கோணத்தின் அருகே செல்லும்போது திசை காட்டிகள் செயல் இழப்பதும் ,விமானங்கள், கப்பல்கள் அனைத்தும் மாயமாவதும் ஒரு மர்ம முடிச்சாகவே இருக்கின்றது. பலர் இது ஏலியன்ஸ் வேட்டையாக இருக்கலாம் எனவும் சிலர் இது கடவுளின் சாபம் எனவும் பல கட்டுக்கதைகளை கூறுகின்றனர்.

இதுவரை இங்கு 75 விமானங்களும் 100க்கும் மேற்பட்ட கப்பல்களும் மாயமாகியுள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மனிதர்களும் காணாமல் போய் உள்ளனர். 1864 செப்டம்பர் 13 மெரிசெல்டஸ்டி என்ற கப்பலும்,1872 ஆண்டு 282



**சாத்தானின் முக்கோணம் என அழைக்கப்படும் இந்த பெர்முடா முக்கோணம் எங்கு உள்ளது?**

**முக்கோணம் பல வருடங்களுக்கு மேலாக தன் மர்மத்தை புதைத்து வைத்துள்ளது**

**ஆஸ்திரேலியாவை சேர்ந்த கார்ல் க்ரூஸ் செல்கினி தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார்**

**பயத்தின் உச்சத்துக்கு கொண்டு செல்லும் இந்த பகுதியில் அப்படி என்ன நடக்கின்றது?**

டன் எடை கொண்ட கப்பலும், 1918 மார்ச் 4 பார்பப்டோஸ் தீவில் இருந்து கிளம்பிய யூ. எஸ். எஸ் சைக்ளோப்ஸ் என்ற பயணிக்கப்பலும் மற்றும் 1812 டிசம்பர் 30 கரோலினாவில் இருந்து நியூயார்க் சென்று கொண்டிருந்த பேரியாட் எனும் பயணிக்கப்பல், 1948 டிசம்பர் 28 பெர்முடா சென்ற கப்பல் மற்றும் 1949 ஜனவரி 17 ஜமைக்காவிலிருந்து கிங்ஸ்டனுக்கு பறந்து சென்ற பயணிகள் விமானம், 1962 ஆம் ஆண்டு பிளைட் 19 என்ற விமானம், 1945 பெர்முடா பகுதியில் பறந்த அமெரிக்கா கடற்கரைக்கு சொந்தமான சிறிய விமானம் எனப்பல விமானங்களும் கப்பல்களும் இந்த பெர்முடா பகுதியில் மாயமானவையாகும். பெர்முடா எனும் இந்த சாத்தானின் பசிக்கு இரையாகிய கப்பல்களினதும் ,விமானங்களினதும், பயணிகளதும் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது. இவ்வாறு பல உயிர்களைக் காவு வாங்கிய இந்த பெர்முடா முக்கோணத்தின் ஊடாக மறைந்துள்ள மர்மம் என்ன? என்பதற்கு எமது விஞ்ஞானிகளின் அறிவியல் தேடல் உலகின் ஒட்டுமொத்த மர்மத்தையும் அடக்கி வைத்திருந்த பெர்முடா முக்கோணத்தின் ரகசியத்தை எமக்கு வெளிச்சமிட்டு காட்டியது.

சாத்தானின் முக்கோணத்தின் பக்கம் சென்றாலே மரணம் நிச்சயம் எனும் கருத்து அனைத்து விஞ்ஞானிகளின் பார்வையையும் தன் பக்கம் திருப்பியது. பெர்முடா முக்கோணத்தில் கப்பல்களும் விமானங்களும் மாயமாவது ஏன்? இதன் மர்மத்தின் பின்னால் உள்ள அறிவியல் என்ன? பல ஊடகங்கள் தீவிரமாக செய்தி பரப்பிய காலகட்டத்தில் கட்டுக்கதைகளை நம்பாத பல்கலைக்கழகத்தில் நூலக ஆய்வாளராக இருந்து லாரன்ஸ் டேவிட் குஷே 1975 ஆம் ஆண்டு The Bermuda triangle mystery solved எனும் ஒரு நூலை வெளியிட்டார். இவர் பெர்முடா முக்கோணம் பற்றிய பல உண்மைகளை கண்டறிந்து உலகுக்கு தெரியப்படுத்தினார். அதாவது பெர்முடா முக்கோணத்தில் காணாமல் போன கப்பல்களும் விமானங்களும் ஏராளமாக காணப்பட்டாலும் சில சமயங்களில் அது கண்டுபிடிக்கப்பட்ட செய்திகள் உறுதியாக குறிப்பிடவில்லை எனவும், மேலும் இவர், தவறான நம்பிக்கைகள் மற்றும் பொய்யான காரணங்களும் அடிப்படையிலான கட்டுக்கதை தான் பெர்முடா பற்றிய கருத்துக்கள் என தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவை சேர்ந்த கார்ல் க்ரூஸ் செல்கினி தீவிர ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார். இதன் பேரில் இவர் பல உண்மைகளை உலகுக்கு தெரியப்படுத்தினார். இவர் கூறியதாவது திசை காட்டிகள் செயலிழப்பதே பெர்முடா முக்கோணத்தின் மர்மமாய் போன கப்பல்கள் மற்றும் விமானங்களின் பின்புலத்தில் உள்ள காரணமாகும். மேலும் இவர் ஆராய்ச்சியின் ஒரு புதிய விடயத்தை தெரிவித்தார். பெர்முடா முக்கோண பகுதியில் அதிகப்படியான காற்றும், பருவநிலை மாற்றங்கள் ஏற்படுத்தும் அழுத்தமும், அறுகோண வடிவில் சுழலும் மேகங்களும் ஆயிரத்து 170 மைல் வேகத்தில் ஏற்படும் காற்றழுத்தமுமே கப்பல்களும் விமானங்களும் காணாமல் போவதற்கு காரணம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் சில ஆராய்ச்சியாளர்கள் இந்த பெர்முடா முக்கோண பகுதியில் 'த கல்ஃப் ஸ்ட்ரீம்'எனும் பெருங்கடல் நீரோட்டத்தில் (பெருங்கடல் நீரோட்டமானது ஒரு ஆறு கடலினுள் ஓடுவதை போன்றது.) எனவே காணாமல் போன கப்பல்களும், விமானங்கள் இந்த பெருங்கடல் நீரோட்டத்தில் அடித்து செல்லப்பட்டு இருக்கலாம் எனக் கூறுகின்றனர். இதன் காரணமாகவே பெர்முடா முக்கோண பகுதியின் மேல் செல்லும் விமானங்களினதும் கப்பல்களினதும் விடை தெரியாத மர்மமும் ,வேற்றுக்கிரகவாசிகளின் நடமாட்டமும் ,தீய சக்தி நிலவுகிறது என கூறுவதும் வெறும் கட்டுக்கதைகளே என்பது எமக்குத் தெளிவாகின்றது.

# PWC நிறுவன பிரதிநிதியாக றொஸ்லின் அஹமட் நிஸார் நியமனம்

அஸ்ஹர் இப்றாஹிம்

இங்கிலாந்தின் பட்டயக் கணக்காளரும், அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் நிதி முகாமைத்துவத்தில் முது நிலை பட்டமும் பெற்றுக் கொண்ட றொஸ்லின் அஹமட் நிஸார், தனது 20வது வயதில் PWC நிறுவனத்தில் நிதித்துறை ஆலோசகராக நியமனம் பெற்றார். இவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவராவார்.

2021 மே மாதத்தில் இருந்து சிரேஷ்ட நிதித்துறை ஆலோசகராக தரமுயர்த்தப்பட்டார். இவரது திறமையை அடையாளம் கண்ட PWC நிறுவனம் இவரை இந்த நிறுவனத்தின் ஆலோசனைக் குழுவிற்கு சிபார்சு செய்தது.

அவுஸ்திரேலியா முழுவதும் PWC நிறுவனத்தில் பணிபுரிகின்ற 10,000 பேர் கொண்ட அணியில் 10 பேர் மட்டுமே இதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

இதில் றொஸ்லி அஹமட் நிஸார் தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் தனிப் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டு சிட்னி மகாநாட்டில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டார்.

மிக விரைவில் தெற்கு அவுஸ்திரேலிய மாநிலத்தில் PWC நிறுவனத்தின் முகாமையாளர்களுள் ஒருவராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

PWC நிறுவனம் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவை தலைமையகமாகக் கொண்டு 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கிளைகளை கொண்டுள்ளது. இது உலகின் முதற்தர நிதி நிறுவனங்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் அக்கரைப்பற்று அஸ் ஸிராஜ் மகா வித்தியாலய பழைய மாணவரும், அக்கரைப்பற்று நூராணியா பள்ளிவாசலில் மார்க்க கல்வி பயின்று திருக் குர் ஆனின் பெரும் பகுதியை மனனம் செய்தவருமாவார்.

றொஸ்லி அஹமட் நிஸார் , சாய்ந்தமருதை பிறப்பிடமாகவும் அக்கரைப்பற்றை வதிவிடமாகவும் கொண்ட அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றும் றஸீட் ஏ நிஸார், றிஸானா தம்பதிகளின் புதல்வருமாகும்.






மூளாய் வைத்தியசாலைக்கு

# ஜப்பானிய நோயாளர் காவு வண்டிகள்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்துக்கு, இரு பாவித்த நோயாளர் காவு வண்டிகளை கையளிக்கும் நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி கலந்து கொண்டார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மருத்துவ சூழல் வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், ஜப்பானிய அரசாங்கத்தின் Grassroots Human Security Grant Aid திட்டத்தின் கீழ் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஜப்பானிய அரசாங்கத்தினால் இரண்டு பயன்படுத்திய நோயாளர் காவு வண்டிகளை இறக்குமதி செய்வதற்கு 36,759 அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. சுமார் 1500 நோயாளர்கள் வாராந்தம் இந்த வைத்தியசாலை சேவைகளை பயன்படுத்துகின்றனர். இந்தத் திட்டத்தினூடாக வைத்தியசாலைக்கு உரிய காலப்பகுதியில் சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதுடன், பின்தங்கிய பிரதேசங்களுக்கு நடமாடும் வைத்திய ஆலோசனை சேவைகளை பெற்றுக் கொடுக்கவும், நோயாளர் காவு வண்டி சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவசர பராமரிப்பு சேவைகள் மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கும் உதவுவதாக அமைந்துள்ளது. முக்கியமாக, வட பிராந்தியத்தின் மக்களுக்கு அவசர சுகாதார பராமரிப்பு சேவைகளை அணுகுவதற்கான வாய்ப்பை மேம்படுத்துவதாகவும் இந்த அன்பளிப்பு அமைந்துள்ளது.

தூதுவர் மிசுகொஷி தெரிவிக்கையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு தொடர்ச்சியாக ஆதரவளிப்பதற்கு ஜப்பான் தன்னை அர்ப்பணித்துள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களிலிருந்து விடுபடுவதற்கும், சமாதானம் மற்றும் உறுதித் தன்மையை ஏற்படுத்துவதும் ஜப்பானிய மானிய உதவித் திட்டத்தின் எதிர்பார்ப்பாகும். இந்தப் பிராந்தியத்தின் மருத்துவ நிலையை மேம்படுத்துவதற்கு இந்த மானிய உதவித் திட்டம் பங்களிப்புச் செய்யும் என எதிர்பார்ப்பதுடன், வடக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரங்களில் காணப்படும் இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கும் உதவியாக அமைந்திருக்கும் எனவும் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.




மாணவர்களின் கல்வியை மீட்கும் முயற்சிக்கு

# கல்வி அமைச்சு மற்றும் யுனிசெப் தலைமைத்துவம்

கடந்த மூன்று வருடங்களில் நீடித்த பாடசாலை மூடல்கள் மற்றும் அவ்வப்போது கல்விக்கு ஏற்பட்ட இடையூறுகளால் பாதிக்கப்பட்ட நாடு முழுவதிலும் உள்ள 1.6 மில்லியன் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு தமது கல்வியை மீட்பதற்கு உதவி செய்யும் தேசிய முயற்சிக்கு கல்வி அமைச்சு மற்றும் யுனிசெப் ஆகியன தலைமை தாங்குகின்றன.

கல்வி அமைச்சுத் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவர்களில் 85% பேர் ஆகக் குறைந்த எழுத்தறிவு மற்றும் எண்ணறிவு நிலைகளை அடையவில்லை. இது அவர்களின் இடைநிலை பாடசாலையின் மாற்றத்துக்கும், அதற்கு அப்பாலான வாழ்க்கை மற்றும் தொழிலுக்கும் இன்றியமையாததாகும்.

கல்வி அமைச்சர் கலாநிதி சசில் பிரேமஜயந்த தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி கிரிஸ்டியன் ஸ்கூக் மற்றும் அரசாங்க, அபிவிருத்திப் பங்காளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மொத்தத் தேசிய உற்பத்தியில் 2% இற்கும் குறைவான தொகையையே இலங்கை தற்பொழுது கல்விக்காக ஒதுக்கியுள்ளது. இது கல்விக்கான ஒதுக்கீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4-6% ஆக இருக்க வேண்டும் என்ற சர்வதே அளவுகோலுக்குக் கீழ் காணப்படுவதுடன், தெற்காசியப் பிராந்தியத்தில் இதுவே மிகவும் குறைவாகவும் காணப்படுகிறது.

கற்றல் நெருக்கடியானது பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள சிறுவர்களையும், ஆரம்பத் தரங்களில் உள்ள சிறுவர்களையும், நாட்டின் பெருந்தோட்டத் துறையில் உள்ளவர்களையும் பாதித்துள்ளது.

மகாராஷ்டிரா

# நாய் மீது அசிட் வீசிய பெண் கைது

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையின் மலாட் பகுதியை சேர்ந்த துகாரம் என்பவர் பிரவுனி என்ற நாய் ஒன்றை வளர்த்து வருகிறார். அந்த நாய்க்கு திடீரென கண் அருகே காயம் ஏற்பட்டது. அது எப்படி ஏற்பட்டது என தெரிந்து கொள்வதற்காக துகாரம் தனது குடியிருப்பு பகுதியில் உள்ள சி.சி. டி.வி. காட்சிகளை பரிசீலித்தார். அப்போது அதேபகுதியை சேர்ந்த சபிஸ்தா அன்சாரி என்ற பெண் அந்த நாய் மீது அசிட் வீசியதைப் பார்த்து துகாரம் அதிர்ச்சி



அடைந்துள்ளார்.

சபிஸ்தா தனது வீட்டில் பூனை ஒன்றை செல்லப்பிராணியாக வளர்த்து வந்துள்ளார். அந்த பூனையுடன் துகாரம் வளர்த்து வந்த நாய் விளையாடுவது வழக்கம் என கூறப்படுகிறது.

இதற்கு சபிஸ்தா எதிர்ப்பு தெரிவித்த நிலையில் சம்பவத்தன்று அவர் பூனையுடன் விளையாடிய நாய் மீது அசிட் வீசியது தெரிய வந்துள்ளது. இதனால் நாய் பிரவுனிக்கு கண் பார்வை இழந்ததோடு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டுள்ளது.

சபிஸ்தா அன்சாரி மீது விலங்குகளை கொடுமைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

பீகார்



## உலகிலேயே மிகச்சிறிய ஸ்பூன் உருவாக்கி சாதனை

சிலர் தங்களது அசாத்திய செயல்களால் தங்களுக்கென்று ஓர் அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்வதோடு, உலக சாதனைகளையும் படைக்கின்றனர். அந்தவகையில், பேனாவின் நுனியை விட மிகச்சிறிய மரக்கரண்டியை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளார் பீகாரை சேர்ந்த சஷிகாந்த் பிரஜாபதி என்ற வாலிபர்.

|கைவினை பொருட்கள் தயாரிப்பதில் கைதேர்ந்தவரான இவர் 1.6 மில்லி மீட்டர் அளவில் உலகிலேயே மிகச்சிறிய ஸ்பூனை தயாரித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை செய்ய பல முறை முயற்சி செய்த சஷிகாந்த் 10 முறை தோல்வி அடைந்துள்ளார். ஆனாலும் தனது விடாமுயற்சியால் மீண்டும், மீண்டும் முயற்சி செய்து அதில் வெற்றி கண்டு சாதனை படைத்துள்ளார்..

தமிழகம்

## 9 மீனவர்கள் நாடு திரும்பினர்

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 9 பேர் சொந்த ஊர் திரும்பினர்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து வேல்முருகன், தட்சிணாமூர்த்தி ஆகியோருக்குச் சொந்தமான 2 விசைப்படகுகளில் சுரேஷ், ஆறுமுகம், முத்துக்குமார், மணிகண்டன், ஜெயசீலன், வேலு, முத்து இருளாண்டி, முகம்மது பக்ருதீன், ரங்காசாமி ஆகியோர் கடந்த ஜூலை 25-ம் திகதி கடலுக்குச் சென்றனர். அன்று இரவு நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வழியாக ரோந்து வந்த இலங்கை கடற்படையினர், எல்லை தாண்டி வந்ததாகக் கூறி, 9 மீனவர்களையும் கைது செய்தனர். 2 படகுகளையும் பறிமுதல் செய்தனர். மீனவர்கள் 9 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் ஊர்க் காவல்துறை நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

இவ்வழக்கை



விசாரித்த நீதவான் கஜநிதிபாலன், மீண்டும் இலங்கை எல்லைக்குள் மீன்பிடித்தால் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் 9 மீனவர்களையும் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

பறிமுதல் செய்யப்பட்ட 2 படகுகளின் உரிமையாளர்களும் செப்.14-ம் திகதி உரிய ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டும் என்று நீதவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் விடுதலையான 9 மீனவர்களும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு சென்னை விமான நிலையத்தை சனிக்கிழமை (19) வந்தடைந்தனர். தொடர்ந்து 9 பேரையும் மீன்வளத் துறையினர் தனி வாகனம் மூலம் மண்டபத்துக்கு அழைத்து வந்தனர்.

உக்ரைன்

# உக்ரேன் மீது ரஷ்யா மீண்டும் ஏவுகணை தாக்குதல்

கடந்த 2022 பெப்ரவரி மாதம் 22 அன்று, சிறப்பு இராணுவ நடவடிக்கை எனும் பெயரில் ரஷ்யா, தனது அண்டை நாடான உக்ரேனை ஆக்ரமித்தது. இதனை கடுமையாக எதிர்த்து, ஆக்ரமிப்புக்கு பணிய மறுத்து, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதர உதவியுடனும், இராணுவ உதவியுடனும் உக்ரேன், ரஷ்யாவிற்கு எதிராக போரிட்டு வருகிறது.

இப்போரில் இரு நாடுகளிலும் கடும் உயிர்ச்சேதங்களும்,



கட்டிட சேதங்களும் ஏற்பட்டு வருகிறது. போர் 18 மாதங்களுக்கு மேலாக 540 நாட்களை கடந்து நடைபெற்று வருகிறது.

இரு தரப்பும் ஏவுகணைகள், டிரோன்கள் மற்றும் கடல் டிரோன்கள் மூலம் பரஸ்பரம் தாக்கி வருகின்றனர்.

இந்நிலையில் ரஷ்யா மீண்டும் உக்ரேன் மீது ஒரு ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. உக்ரேனின் தலைநகர் கீவிற்கு வடக்கில் 145 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது செர்னிஹிவ் நகரம். இந்நகரம் இரு பக்கமும் அழகான மரங்கள் நிறைந்த சாலைகளுக்கும், நூற்றாண்டு கால பழமையான தேவாலயங்கள் புகழ் பெற்றது.

## மீம்ஸ் பிரபலம் சீம்ஸ் மரணம்



சமூக வலைதளங்களில் வைரலாக அடிக்கடி பரவும் புகைப்படங்களில் இதுவும் ஒன்று. நெட்டிசன்கள் மத்தியில் “சீம்ஸ்” என்று செல்லமாக அழைக்கப்படும் வைரல் நாய் உயிரிழந்து விட்டதாக, அதன் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். சமூக வலைதளங்களில் மூழ்கியே கிடக்கும் 2K கிட்ஸ் மற்றும் அவ்வப்போது மீம்ஸ்களை பதிவிட்டும், அதனை பகிர்ந்து வரும் 90-ஸ் மற்றும் 80-ஸ் கிட்ஸ்களுக்கு சீம்ஸ் நன்கு அறிமுகமான செல்லப்பிராணி ஆகும்.

கசக்கஸ்தான்

## 4000 வருட பிரமிட் கண்டுபிடிப்பு

பிரமிட்டுகள் என்றாலே எகிப்து நாட்டிலுள்ள உலக அதிசயங்களில் ஒன்றான பிரமிட்டுகள்தான் நமக்கு நினைவுக்கு வரும். வெளிப்புறங்களில் முக்கோணமாகவும், மேலே செல்லச்செல்ல கூம்பு வடிவமும் பெறும் இந்த பிரமாண்டமான பிரமிடுகள், கட்டிடக்கலை வடிவங்களில் ஆச்சர்யமான ஒன்றாக கருதப்படுகிறது.

இவற்றின் அழகை ரசிக்க உலகெங்குமிலிருந்து எகிப்துக்கு சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரமிட்டுகளில் “ஸ்டெப் பிரமிடுகள்” (step pyramids) இன்னும் அரிதானவை. இவ்வகை பிரமிட்டுகள் படிப்படியாக ஒவ்வொரு




தரைதளங்களின் மேல் ஒவ்வொன்றாக கட்டப்பட்டு இருக்கும்.

மத்திய ஆசியாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் பரவி இருக்கும் நாடான கசக்கஸ்தானின் தலைநகரான அஸ்தானாவில் (Astana) உள்ள அபய் (Abai) மாவட்டத்தில், ஸ்டெப் பிரமிட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது 4000 வருடங்களுக்கு முந்தையது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### இரண்டாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# ஐ.அ. அமீரகத்திடம் தோற்ற நியூசிலாந்து

ஐக்கிய அரபு அமீரகத்துக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரில், டுபாயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து தோற்றது.




ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஐ.அ. அமீரகம்

நியூசிலாந்து: 142/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க் சப்மன் 63 (46) ஓட்டங்கள். பந்துவீச்சு: அயன் அஃப்ஸல் கான் 3/20 [4], முஹமட் ஜவடுல்லாஹ் 2/16 [4], அலி நஸீர் 1/25 [3])

ஐ.அ. அமீரகம்: 144/3 (15.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: முஹமட் வஸீம் 55 (29), ஆசிஃப் கான் ஆ.இ 48 (29) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: அயன் அஃப்ஸல் கான்

### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## டொட்டென்ஹாம் வெற்றி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பீறிமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மன்செஸ்டர் யுனைட்டெட்டுடனான போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் வென்றது.



### காசிமி அணியை

## வென்ற நிந்தவூர் அல் அஸ்றக் 98 அணி

■ அஸ்ஹர் இப்றாஹிம்

காசிமி அணிக்கெதிரான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் நிந்தவூர் அல் அஸ்றக் 98 அணி வென்றது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் 104 ஓட்டங்களைப் பெற்று நிந்தவூர் அல் அஸ்றக் 98 அணியினர் வெற்றி பெற்றனர்.

இடம்பெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காசிமி அணியினர் 10 ஓவர்களில் 100 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நிந்தவூர் 98 அணியினர் 6.4 ஓவர்களில் 104 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர்.

> **நிந்தவூர் 98 அணியினர் 6.4 ஓவர்களில் 104 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர்**

### டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

## முடிசூடிய சென். பீற்றர்ஸ்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில் சென். பீற்றர்ஸ் கல்லூரி சம்பியனாக முடிசூடியது.

பம்பலப்பிட்டியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இசிப்பத்தன கல்லூரியுடனான இறுதிப் போட்டியில் 28-17 என்ற புள்ளிகள் கணக்கில் சென். பீற்றர்ஸ் சம்பியனாகியது.

சென். பீற்றர்ஸ் சார்பாக யுமெத் ஷிகார, டுலாஜ் நவோதய, குஷான் தரிந்து, டினீத் ரணசிங்க ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையைப் பெற்றதோடு, ஷிகார ட்ரையை கொன்வேர்ஷனாக மாற்றியதோடு, பெனால்டியில் ஷிகார, தரிந்து ஆகியோர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

இசிப்பத்தன சார்பாக, றினேஷ் சில்வா, டமிரு ராஜபக்ஷ ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையைப் பெற்றதோடு, இரண்டு ட்ரைகளையும் சில்வா கொன்வேர்ஷனாக மாற்றியதோடு, பெனால்டியொன்றுக்கான புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

Dialog SCHOOLS RUGBY

### வரலாற்றுச் சாதனை படைத்த

## அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவர் கௌரவிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

வவுனியாவில் நடைபெற்று வரும் வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகளில் சாதனை படைத்த அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வானது பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுகளில் எறிபந்து போட்டியில் மடு வலயத்திலிருந்து அடம்பன் மத்திய மகா வித்தியாலய 17 வயது பிரிவின் கீழ் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் 20 வயது பிரிவின் கீழ் ஆண்கள் அணியும், பெண்கள் அணியும் பங்கு பற்றியிருந்தன.



இப்போட்டிகளில் 20 வயது ஆண்கள் முதலாமிடத்தையும், 17 வயது பெண்கள் இரண்டாமிடத்தையும் 17 வயது ஆண்கள் மூன்றாமிடத்தையும் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

சாதனை வீரர்கள் பவனியாக பாடசாலை வரை அழைத்து வரப்பட்டு வாத்திய இசையுடன் பாடசாலை மண்டபம் நோக்கி அழைத்து வரப்பட்டனர்.

> **சாதனை படைத்த அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வானது பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது**

இதன்போது சாதனை படைத்த மாணவர்கள் விருந்தினர்களால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 21 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது